தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச், 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

உய்யக்கொண்டான் வாய்க்கால் ஏரிகள்.

*361 வினா— திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியைச் சார்ந்துள்ள உய்யக்கொண்டான் ஆற்று வாய்க்கால் ஏரிகளை (குளங்கள்) ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதியைச் சார்ந்துள்ள உய்யக்கொண்டான் ஆற்றுப் பாசன ஏரிகளில் தூர் எடுக்கும் வேலை எதுவும் தற்போது ஆய்வில் இல்லை. எனினும் ஏரிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் இப்போது இல்லை என்று சொன்னார்கள். உய்யக்கொண்டான் ஆற்றுப் பாசனம் சரியாக இருந்தால், கூத்தப்பா, பெரியகுளம், வளப்பூர் போன்ற ஏரிகளைச் சுற்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் பாசனம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. முன்னிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இதற்கு ஒரு திட்டம் தீட்டி இருந்தது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் தெரிவித்தது ஏரிகள் மராமத்துச் செய்யப்படும் திட்டம் இல்லை என்று. கரை அமைப்பு போன்ற திட்டங்கள் ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் இரண்டு ஏரிகளும், சிறு பாசனத் திட்டத்தின்கீழ் இரண்டு ஏரிகளும் மராமத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நடப்பாண்டில் 5 ஏரிகள் பழுது பார்க்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. உய்யக்கொண்டான் கால்வாய் சீரமைப்பு வேலையும் இப்போது நடைபெற்று வருகிறது.

[1978 மார்ச் 3

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, உய்யக் கொண்டான் வாய்க்காலினுல் திருவெறும்பூர் பயன்படுவதைப் போல, திருவையாறில் ஒரு பகுதியும் பயனடைகிறது. ஆகவே, ஏரிகளை ஆழப்படுத்தும் வேலைகளைத் தொடங்கும் போது உய்யக் கொண்டான் கால்வாய் சீரமைப்புப் பணியையும் நிறைவேற்றி, திருவையாறு பகுதி மக்களும் அதன் பயனை அடைய துரித நட வடிக்கை எடுக்க வழிவகைச் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர் களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திருவெறும்பூர் பகுதி யைச் சேர்ந்தது. நீங்கள் கேட்கும் கேள்விக்கு அமைச்சரிடம் விளக்கம் இருக்காது. அதனுல் அமைச்சரவர்கள் உங்கள் கேள் விக்குப்பதில் சொல்ல இயலாது. நீங்கள் தயவுசெய்து உட்காருங் கள்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, உய்யக் கொண்டான் ஆறு திருச்சி நகரின் மையமாகச் சென்று திரு வெறும்பூரை அடைகிறது. அந்த ஆற்றிலே வெள்ளம் வரும் போதெல்லாம் திருச்சி நகரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, திருச்சி நகரப் பகுதியில் அந்த ஆற்றின் கரையை சிமின்ட் அல்லது வேறு கற்களைப் போட்டு உயர்த்தி, பலப்படுத் தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எப்போதோ ஒரு முறை வெள்ளம் வருகிறது. இந்தத் தடவை சற்றும் எதிர் பாராதவிதமான புயலும் மழையும் சேர்ந்து வந்த காரணத் தினுல் அந்தப் பகுதியில் வெள்ளம் வந்தது. அதற்காக கரை அமைப்பது சிக்கனமாக இருக்காது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த உய்யக் கொண்டான் ஆறு திருச்சி நகரின் இருதயம் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த ஆற்றிலிருந்து எக்கச்சக்கமான நாற்றம் அடித்து, பொதுச் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படு கிறது. அந்த நாற்றத்தைத் தடுக்க நடவடிக்கை உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வெள்ளம் வருமானுல் அந்த நாற்றத்தை அடித்துக் கொண்டு போய்விடும்.

1978 மார்ச் 3]

திரு. ரா. உமாநாத்: எப்போதோ ஒரு தடவைதான் வெள் ளம் வரும் என்று சொன்னார்கள். அதனால் ‘மேஜர் போர்ஷன்’ நாற்றம் அடிக்கும் காலமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதை நகராட்சி மன்றம் கவனிக்கும்.

தேனி ஒன்றியத்திற்கு பாசன வசதிகள்.

* 362 வின —திரு. வெ. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடை ளிப்பாரா: தேனி ஒன்றியத்திலுள்ள வறட்சிப் பகுதிகளாகிய கொடுவிலான்பட்டி, தாடிச்சேரிதுப்புக்குண்டு, பூமலைக்குண்டு, ஜங்கல்பட்டி ரெவின்யூ கிராமங்களுக்கான நீர்பாசனத் திட்டங் களை ஏற்படுத்துவதற்கு அரசு செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாளிட்ட அரசு பொதுப்பணித்துறை ஆணை எண் 647-ல் பெரிய குளம் தாலுக்காவில் பி. டி. ராஜன் வாய்க்கால் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினல் கொடுவிலார்பட்டி, தாடிச்சேரி, தொப்புக்குண்டு, பூமலைக்குண்டு, ஜங்கல்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள கண்மாய்கள் பயனடைய இருக்கின்றன.

திரு. வெ. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக தேனி ஒன்றியப் பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கு மேற்படாமல் பயனடையும் வகையில் பாசனக் கண்மாய்களுக்கு ‘‘ஸ்டெபுலைசேஷன்’’ (Stabilisation) ஏற்படும் நிலைதான் இருக்கிறது. அதனல் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 180 எம்.சி.எப்.டி. தண்ணீர் முழுவதை யும் தேனி வட்டத்திற்குப் பயன்படுத்த முடியாது ஆகவே, இப்போது நடந்துவருகிற உலக வங்கித் திட்டத்தின்கீழ் பாசன வசதி அளிக்கப்படும் 35,000 ஏக்கர் திட்டத்தில், தேனி பகுதிக்கு மேலும் 10,000 ஏக்கர் புதிய ‘ட்ரை ஆயக்கட்டு’ ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே ஒரு ‘சம மட்ட வாய்க்கால்’ அதாவது ‘காண்டூர் கனல்’ வெட்டி, தண்ணீர் தருவதற்குக் கேட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்-கிறது.